# சார்பு நீதிமன்றம், சங்ககிரி

## MCOP No.519/2011

எ.ம.சா.**1**

நாள்: **18.06.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | **சுஜாகரன்** | மதம்: | |
| தகப்பனார்/கணவர் பெயர்: | | ஜாதி: | |
| கிராமம்: | | வேலை: | |
| வட்டம்: | | வயது: | |

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18-ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய எ.ம.சா.1 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் இம்மனுவில் 2-ம் எதிர் மனுதாரர் ஆவேன். நான் எங்களது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் கண்டுள்ள சான்றாவணங்கள் பட்டியலில் உள்ள வரிசை எண்.1 மற்றும் 2 ஆவணங்கள் முறையே எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை

விபத்து நடைபெற்றது உண்மைதான். விபத்திற்கு காரணமான KA 01 4590 என்ற லாரி 1 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றால், சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் லாரியின் ஓட்டுநருக்கு எதிராகத்தான் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு விபத்து தேதியில் எங்கள் நிறுவனத்தின் மூலம்

காப்பீடு வழங்கப்படவில்லை என்று நாங்கள் தாக்கல் செய்த எதிருரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால் இந்த மனுதாரருக்கு நாங்கள் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. விபத்து தேதியில் 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் வழங்கிய காப்பீடு அமலில் இருந்துள்ளது என்றாலும், நான் முதல் விசாரணையில் காப்பீடு இல்லை என்று சொன்னது பொய் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை

2 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிருரையில் விபத்து வாகனத்திற்கு விபத்து தேதியில் காப்பீடு அமலில் இல்லை என்று தெரிவித்திருந்தோம்.

குறுக்கு விசாரணை

விபத்து வாகனத்திற்கு Policy Number : 07010/0/31/16/21/0084/96-97 என்ற காப்பீட்டு ஆவணம் வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. ஆனால் நாங்கள் வேண்டுமென்றே அந்த ஆவணத்தை தாக்கல் செய்யாமல் இந்த மனுவில் மறைத்து வைத்துள்ளோம் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-சுஜாகரன்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.